


முன்னாள் அமைச்சரும், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., – திருமதி ஆர்.ஆதிலட்சுமி ஆகியோரின் மகள் வழிப் பேரனும் – டாக்டர் பா.அருண் குமார் – உமாமகேஸ்வரி ஆகியோரின் புதல்வருமான ஏ.வைஷ்ணவ் – திருநெல்வேலி சரவணன் – திருமதி விஜயசங்கரி ஆகியோரின் புதல்வியான எஸ்.விகாஷ்னி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா நேற்று மாலை சென்னை – திருவான்மியூரில் அமைந்துள்ள இராமச்சந்திரா கன்வென்ஷன் ஹாலில் நடைபெற்றது. இவ்விழாவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, தங்கதமிழ்ச்செல்வன் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடன் உள்ளார்கள்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று மாலை, சென்னை – நீலாங்கரையில் நடைபெற்ற – முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளரும், முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவருமான (நினைவில் வாழும்) கே.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்கள் சா.விக்னேஷ் – ம.ஜீவிதா ஆகியோரை வாழ்த்தினார். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக், இலத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன், ஒன்றியப் பெருந்தலைவர் சாந்தி ராமச்சந்திரன், கே.எஸ்.ஆர்.கீர்த்திதரன் உள்ளிட்ட முன்னணியினர் உடன் உள்ளார்கள்.

கட்டணமில்லா அரிசியை 'பாலிஷ்' போட்டு – 30 ரூபாய்க்கு விற்று கொள்ளை அடிப்பதுதான் 'டம்மி' CM சொன்ன மாற்றமா?

சன்ன ரக பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்ய இந்தக் கோமாளி அரசு எப்போது டெண்டர் விட்டது!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

சென்னை, அக். 25- சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த வலைதளப் பதிவொன்றில், "மக்களுக்கான கட்டணமில்லா அரிசியை 'பாலிஷ்' போட்டு 30 ரூபாய்க்கு விற்றுக் கொள்ளை அடிப்பதுதான் டம்மி 'CM சொன்ன மாற்றமா?" என்றும் - "சன்னரக பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்ய இந்தக் கோமாளி அரசு எப்போது டெண்டர் விட்டது?" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டமன்ற எதிர் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

மக்களுக்கான கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு 30 ரூபாய்க்கு விற்று கொள்ளை அடிப்பது தான் Dummy CM சொன்ன மாற்றமா?



அரிசி விலையேற்றத்துக்கான தீர்வாக, கூட்டுறவு அங்காடிகளில் சன்னரகப் பொன்னி அரிசியை ரூ.30க்கு வாங்கலாம் என்று இந்த அரசு அறிவித்தது.

அதை நம்பி ரேஷன் கடைகளுக்குப் போனால், வழக்கமாக வழங்கப்படும் கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு, சன்னரகப் பொன்னி அரிசி என்று விற்கப்படுவதாக தமிழ் நாடெங்கும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பல இடங்களில் அரிசியை திருப்பிக்கொடுத்தும் வருகின்றனர்.

மக்கள் முற்றுகையால் ஓட்டம் பிடித்த த.வெ.க. எம்.எல்.ஏ.!

கம்பத்தில் பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்பட்டதால், த.வெ.க எம்.எல்.ஏ.வை முற்றுகையிட்டு பொதுமக்கள் கேள்வி எழுப்பிய போது, கரூர் பாணியில் ஓட்டமெடுத்து இருக்கிறார் அந்த MLA.

தமிழ்நாட்டில் 2 கோடியே 28 லட்சம் குடும்ப அட்டைகள் இருக்கும் போது, வெறும் 250 இடங்களில் அதுவும் குடும்பத்துக்கு தலா 5 கிலோ மட்டும் என, 'சன்ன ரகப் பொன்னி' என்ற பெயரில், பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்படுவதாக தொடர்ந்து புகார்கள் வருகின்றன.

சிறப்பு விநியோகத் திட்டம் கண்டவர் - முத்தமிழறிஞர் கலைஞர்!

2007ல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்த போது, அன்றைய முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்,

இந்தக் கோமாளி அரசு, சன்ன ரகப் பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு எப்போது டெண்டர் விட்டது? டெண்டர் எடுத்த நிறுவனங்கள் எவை? என்ன விலைக்கு அவர்கள் அரசுக்கு பொன்னி அரிசியை வழங்கினார்கள்? த.வெ.க அரசு பொதுமக்களுக்கு எவ்வளவு மானிய விலையில் அரிசியை வழங்குகிறது?

சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தை அறிவித்து, வெளிப்படையான முறையில் டெண்டர் விட்டு, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, உள்ளிட்ட பொருட்களை மானிய விலையில் மக்களுக்கு வழங்கினார்கள்.

ஆனால், இந்தக் கோமாளி அரசு, சன்ன ரகப் பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு எப்போது டெண்டர் விட்டது? டெண்டர் எடுத்த நிறுவனங்கள் எவை?

என்ன விலைக்கு அவர்கள் அரசுக்கு பொன்னி அரிசியை வழங்கினார்கள்? த.வெ.க அரசு பொதுமக்களுக்கு எவ்வளவு மானிய விலையில் அரிசியை வழங்குகிறது? இது குறித்து பாலிஷ் எதுவும் போடாமல் வெளிப்படைத்தன்மையுடன் இந்த ஆட்சியாளர்கள் பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆர்.டி.சேகர் தலைமை! ஐட்ரீம் ஆர்.மூர்த்தி – ஜே.ஜே.எபினேசர் – இரா.செந்தில் குமார் – வ.பெ.சுரேஷ் முன்னிலை!

இராயபுரம் கிழக்கு எம்.தங்கராஜ் இல்ல மணவிழா வரவேற்பு!

ஆர்.எஸ்.பாரதி வாழ்த்து! கலாநிதி வீராசாமி எம்.பி., – டாக்டர் அ.சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை, அக்.25- இராயபுரம் கிழக்குப்பகுதி வர்த்தகர் அணி,49 வது வட்டம் எம். தங்கராஜ் - டி.தமிழரசி ஆகியோரின் புதல்வி எம். டி.நந்தினி - எஸ்.தினேஷ் ஆகியோரின் மணவிழா வரவேற்பு இன்று (25.10.2026 -ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 6.30 மணிக்கு தண்டையார் பேட்டை, டி.எச்.சாலையில் உள்ள ஏ.என்.ஆர். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பிற்கு மாவட்டக்கழகப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் தலைமை வகிக்கிறார்.

ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், இரா. செந்தில்குமார், வ.பெ. சுரேஷ், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், வே.சிவகுமார்,ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



வட்டக் கழகப் பொறுப்பாளர் க.கலைசெல்வன், எல்.சீனிவாசன், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, அ.குமார், வனிதா, கே.ஆர். கோபிநாத், ஜி.கோதண்டராமன், த.கு.பன்னீர்செல்வம், இ.கதிரவன், சுதாகர், கே.பாஸ்கர், சி.ஏ.மகேஷ்குமார், கே.கைலாசம் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

மணமக்களை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.,டாக்டர் அ.சுபேர்கான் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

மேலும் தா.இளைய அருணா, பி.டி.பாண்டிச் செல்வம், ந.மனோகரன், இரா. மதிவாணன், என். மருதுகணேஷ், இரா. வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக் கண்ணன், மு.கோபி, க. நாகம்மை, வி.தயாளன், சு.சேகர், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், நேதாஜி கணேசன், கட்டீஸ்,

ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா கே.மதன், வெ.சு. சத்யநாராயணன், இர. பொன்இளவரசன், ஏ.டி. மணி, லட்சுமிவேலு, ஒலி ஒளி ஆ.பாபு, எஸ்.எம்.பர சுராமன், வை.கலைவாணன், வி.வி.ரமேஸ், விமலா மோகன், லியோ டி.சுரேஷ், கார்த்திக், செங்குட்டுவன், பி.செந்தில் குமார்,

த.ஜெயபாலன், பி. சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, காட்டன், சதீஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.ன், க.கோவிந்தராஜ், பி. கண்ணன், எம்.என்.வெங்கட், கே.லட்சுமணன், ஐ.சி. எப்.பழனி, வி.குமார், அத்தோபி.முனுசாமி, எஸ். சுரேஷ், என்.பாரி, எம்.புருஷோத்தமன், கே.பொம்முராஜ், எஸ்.பி.எஸ்.புத்தன் எஸ்.மதியழகன் என்.எழுமலை ஏ.வேணுகோபால் ,சி.லிங்கேசன், கே.என். பார்த்திபன் , எம்.டி.மதன் ராஜ், சி.மனோகரன், எஸ். சந்திரபொம்மு, ட.கிருஷ்ணஹரிஹான், ஜி. செந்தில் குமார், கே.பால கிருஷ்ணன், எம்.மோகன்பாபு, ஆர்.பாரதிதாசன், எஸ். ராஜசேகர், ஜி.விநாயக மூர்த்தி, சேதுராமன், என். அப்துல்மாலிக், ஜி.வினோத் குமார், எஸ்.பொன்னரசன், ஆர்.நரேஷ், என். சுனில், எம்.அருண்பிரபாகரன்,

எம்.கே.இஸ்மாயில், கு. ரமேஷ், சு.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலாலட்சுமணன், ஜே.கௌரீஸ்வரன், எஸ். யுவராஜ், எம்.பாலாஜி, எம்.பாலசுப்பிரமணியம், ஏ.அன்வர், எஸ்.முகமது மொய்தீன், ஆர்.டி.ஜெய் சங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மா.நாகராஜன் நன்றி கூறுகிறார்.

மணவிழா வரவேற்பிற்கு வருகை தருவோரை எம்.கணேசன், ஜி.கோதண்டராமன், கே.பாலகிருஷ்ணன், ஏ.ஜெயராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

முரசொலியில் பணிபுரியும்

சி.காசி இல்ல மணவிழா!

இன்று நடைபெறுகின்றது!

சென்னை, அக். 25 - முரசொலியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் சி.காசி - கே.நளினி ஆகியோரின் புதல்வர் கே.விஸ்வநாத் - எம்.லாவண்யா ஆகியோரின் மணவிழா இன்று (25.10.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7.30 மணிக்கு, சென்னை, திருவள்ளூர் நெடுஞ்சாலை, திருமழிசையில் அமைந்துள்ள ஜி.கே.ஆர். மஹாலில் நடைபெறுகின்றது.



முன்னதாக மணவிழா வரவேற்பு நேற்று (24.10.2026 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

இம்மண விழாவில் கழக முன்னணியினர், உற்றார், உறவினர் கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழா வருகை தருவோரை வி. சந்திரன், சி.லதா, சி.பன்னீர்செல்வம், சி.ஓவியா டி.பழனி, பி.ரம்யா, எம். விமலா, முனுசாமி, எம். பாலாஜி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

'அர்னாப்' புயல்: பழைய பல்லவியைப் பாடாமல்

த.வெ.க. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை தீவிரப்படுத்த வேண்டும்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 25 - 'அர்னாப்' புயல் வரும் நிலையில் பழைய பல்லவியை பாடாமல் த.வெ.க. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை தீவிரப்படுத்த வேண்டும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 24.10.2026 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது :-

சூப்பர் எல்நினோ தாக்கத்தால் தமிழகத்தில் வரலாறு காணாத வெப்பம் கடந்த மார்ச் துவங்கி அக்டோபர் 2ம் வாரம் வரை நீடித்தது. வழக்கமாக அக்னி நட்சத்திரம் முடிந்ததும் தென்மேற்கு பருவமழை சீசன் ஜூனில் துவங்கி செப்டம்பர் வரை நீடிக்கும். இந்த பருவமழையை நம்பி இருபோக பாசனம் மற்றும் குறுவை சாகுபடி நடக்கும். ஆனால், இந்த முறை வெயில் கொளுத்தி எடுத்ததால், தென்மேற்கு பருவமழை பொய்த்தது. இதனால் மேட்டூர் அணையில் டெல்டா பாசனத்துக்காக வழக்கமாக ஜூன் 12ம் தேதி திறக்கப்படும் தண்ணீர் திறக்கப்படவில்லை.

பின்னர் நீர்ப்பிடிப்பில் பெய்த பரவலான மழையை தொடர்ந்து, செப்டம்பர் 1ம் தேதி தான் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. இதனால் பருவம் தவறி பல்லாயிரம் ஏக்கரில் நடக்கும் நெல் சாகுபடி



தினகரன்

அக்டோபர் 24, 2026 சனிக்கிழமை

அட்டன்ஷன் 'அர்னாப்'

சூப்பர் எல்நினோ தாக்கத்தால் தமிழகத்தில் வரலாறு காணாத வெப்பம் கடந்த மார்ச் துவங்கி அக்டோபர் 2ம் வாரம் வரை நீடித்தது. வழக்கமாக அக்னி நட்சத்திரம் முடிந்ததும் தென்மேற்கு பருவமழை சீசன் ஜூனில் துவங்கி செப்டம்பர் வரை நீடிக்கும். இந்த பருவமழையை நம்பி இருபோக பாசனம் மற்றும் குறுவை சாகுபடி நடக்கும். ஆனால், இந்த முறை வெயில் கொளுத்தி எடுத்ததால், தென்மேற்கு பருவமழை பொய்த்தது. இதனால் மேட்டூர் அணையில் டெல்டா பாசனத்துக்காக வழக்கமாக ஜூன் 12ம் தேதி திறக்கப்படும் தண்ணீர் திறக்கப்படவில்லை.

பின்னர் நீர்ப்பிடிப்பில் பெய்த பரவலான மழையை தொடர்ந்து, செப்டம்பர் 1ம் தேதிதான் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. இதனால் பருவம் தவறி பல்லாயிரம் ஏக்கரில் நடக்கும் நெல் சாகுபடி

நடைபெறவில்லை. ஒருபுறம் த.வெ.க. அரசு அறிவித்தபடி, பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யாதது, 2ம் போகம் பொய்த்தது உள்ளிட்ட காரணங்களால் தமிழக விவசாயிகள் பெரிய அளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் வெளிமாநிலங்களில் இருந்து அரிசி வாங்கி விற்கும் சூழல் உருவானதால், சில்லரையில் அரிசி விற்பனை ரூ.80ஐ தாண்டி விற்று வருகிறது.

சூப்பர் எல்நினோவால் தமிழகத்தில் வெப்பம் சுமார் 7 மாதங்களுக்கும் மேலாக நீடித்த நிலையில் தற்போது வானிலை முற்றிலுமாக மாறி குளிர்ச்சியான சூழல் உருவாகியுள்ளது. வடகிழக்கு பருவமழை தீவிரமாகியுள்ளதே இதற்கு முக்கிய காரணம். இதன்காரணமாக சென்னை, மதுரை, கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி உள்ளிட்ட பல வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. மேலும், சில நாட்கள் கனமழை நீடிக்கும்; அக்டோபர் 26ம் தேதி வரை தமிழகத்தில் பரவலாக மழை பெய்யுமென வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்தொடர்ச்சியாக வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. இது படிப்படியாக மாற்றமடைந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி, நாளை மறுதினம் (அக். 26) புயலாக மாற வாய்ப்புள்ளதால், தமிழகத்துக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த புயலுக்கு 'அர்னாப்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த புயல் வடக்கு ஆந்திரா - தெற்கு ஒடிசா கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

அர்னாப் என்பதற்கு வங்க மொழியில் கடல் அல்லது பெருங்கடல் என அர்த்தமாகும். இது வழக்கம்போல வைக்கும் பெயர்தான் என்றாலும், சூப்பர் எல்நினோவால் எப்படி கடும் வெப்பம் நம்மை தாக்கியதோ, அது போலவே தமிழகத்தின் ஓராண்டு மொத்த மழையை ஒரே நாளில் பொழிய வைக்கவும் அல்லது பெரு மழை பெய்து கடும் பாதிப்பை தரும் என்ற வானிலை ஆய்வாளர்கள் கருத்து அச்சுறுத்தி வருகிறது. மழைப்பொழிவால் பெருங்கடல் போல வெள்ளப்பெருக்கு நிகழ்ந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இதன்காரணமாக, மீனவர்கள் கடலுக்கு செல்லவேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது. கனமழை எதிரொலியாக பல மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், 'இவ்வளவு மழை பெய்யுமென எதிர்பார்க்கவில்லை. இப்படி பெய்தால் எப்படி சமாளிப்பது? கடந்த ஆட்சியில்...' என்கிற ரீதியில் த.வெ.க. அரசு பழைய பல்லவியை தொடர்ந்து பாடிக் கொண்டிருப்பதால் எந்த பயனுமில்லை.

எந்தவித பேரிடர் சூழலையும் சமாளிக்கக் கூடிய வகையில், ஆயத்த பணிகளை தீவிரப்படுத்த வேண்டும். மீட்புப்படைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மழை நீர் வாய்க்கால்களை அவசரகதியில் தூர்வார வேண்டும். அடுத்தடுத்து வரும் நாட்கள் மிக கவனமாக இருக்க வேண்டிய காலக்கட்டம் என்பதால், த.வெ.க. அரசு அதற்கேற்ற வகையில் முன்னேற்பாடுகளை, தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.